செ.வெ.எண். 32/பிப்ரவரி நாள்: 13.02.2017

தருமபுரி மாவட்டம்

# மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 21 பயனாளிகளுக்கு ரூ. 2 இலட்சத்து 40 ஆயிரத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.





தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (13.02.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக மேல்நிலைத் தொட்டி அமைத்தல், புதிய ஆழ்துளை கிணறு, தகனமேடை, குடிநீர் வசதி, மின் வசதி, பட்டா வேண்டுதல், கல்வி உதவி தொகை, தரைமட்ட பாலம், மூன்று சக்கர வண்டி, ஓய்வூதிய தொகை, பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி மற்றும் வீட்டுமனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் என மொத்தம் 311 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார்.

**முன்னதாக உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் திருமண நிதியுதவி தலா ரூ. 8,000/- வீதம் 5 நபருக்கும், இறப்பு மரணம் மற்றும் ஈமச்சடங்கு நிவாரண தொகையாக தலா ரூ. 12,500/- 16 நபருக்கும என மொத்தம் 21 பனாளிகளுக்கு ரூ. 2 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு. கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்

(பொது) திருமதி. பாப்பாத்தியம்மாள், தனி துணை ஆட்சியாகள் (கலால்) திருமதி. மல்லிகா, (ச.பா.தி) திரு. குப்புசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திருமதி. இலாஹிஜான், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி. விமலாதேவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.